poles apart. But still, we on our side, also feel that Government of India were not right in interfering with Kerala affairs in the way they did and that they were not right in taking over the administration and bringing it under President's Rule. We also join in the protest and walk out.

(The hon. Member followed by Members of his party walked out.)

Sri C. N. ANNADURAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மாநில மக்களுடைய உரிமையைப் பெற்ற ஒரு சர்க்கார், எந்தக் கட்சியால் நடத்தப்பட்டாலும், மக்களுடைய நம்பிக்கையை அது பெற்றிருக்கிற வரையில், அதனைப் பதவியில் அமர்த்த வேண்டும் என்ற நல்ல அரசியல் சம்பிரதாயத்தைப் பாழாக்குகிற முறையிலே நடந்துகொண்ட மத்திய சர்க்காருடைய போக்கைப்பற்றி இங்கே விவாதிப்பது அரசியல் சட்டத்தின்படி சரியல்ல என்பதை நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி, 'வெளியேற வேண்டுமென்ற ஆசை இருந்தால் வெளியேறலாம்' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். உள்ளே இருப்பதற்கு ஆசை உள்ளவர்கள் உள்ளே இருந்து கொண்டிருக்கலாம். ஆனால், பிரச்னைகள் வருகிற நேரத்தில் வெளியேறி தங்களுடைய கண்டனத்தைத் தெரிவிப்பது என்பது சில தடவைகளிலே வெளியேறிய அனுபவத்தைப் பெற்றிருக்கிற அமைச்சர் அவர்கள் உணருவார்கள் என்று கருதி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே இந்தப் பிரச்னையை விவாதிப்பதற்கு மறுக்கின்ற போக்கைக் கண்டிக்கிற தன்மையில் நானும் என்னுடைய கட்சியினரும் வெளியேறுகின்றோம். (கனம் அங்கத்தினரும் அவருடைய கட்சியைச் சார்ந்தவர்களும் வெளியேறினார்கள்.)

* **Sri K. SATTANATHA KARAYALAR** : கனம் சபாநாயகர் அவர்களே என்னுடைய கட்சியின் கண்டனத்தைத் தெரிவிக்கும் முறையில் நானும், என்னுடைய கட்சி அங்கத்தினர்களும் வெளியேறுகின்றோம். (கனம் அங்கத்தினரும் அவருடைய கட்சியைச் சார்ந்தவர்களும் வெளியேறினார்கள்.)

Sri S. PAKKIRISAMI PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே, எங்களுடைய கட்சியின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் முறையில் நான் வெளியேறுகிறேன். (கனம் அங்கத்தினர் வெளியேறினார்.)

* **Sri P. S. CHINNADURAI** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மக்களுடைய ஜனநாயக உரிமையை மதிக்காமல், சர்வாதிகாரப் போக்கிலே கேரளாவில் ஆட்சி புரிந்து வந்த அரசாங்கம் விரைவில் வெளியேற வேண்டும் என்ற மக்களுடைய கோரிக்கையை அலட்சியப்படுத்தி, தங்களது ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு முற்பட்ட காரணத்தினால், மக்களுடைய நலனை உத்தேசித்து மத்திய அரசாங்கம் தலையிட்டு அங்கே ஜனநாயகத்தைக் காப்பாற்றியது. ஆகவே, அப்படிப்பட்ட, ஜனநாயகத்திற்கு முற்றிலும் ஒத்ததான ஒரு செயலைக் கண்டிக்கிற முறையிலே இங்கே சில கனம் அங்கத்தினர்கள் இந்தச் சபையைவிட்டு வெளியேறியிருப்பது மிகவும் துர்ப்பாக்கியம் என்று நான் கருதுகிறேன். அந்தத் துர்ப்பாக்கியமான ஜனவிரோத நடவடிக்கைகளில் நாங்கள் கலந்து கொள்ளவில்லை, ஒருப்படவில்லை என்று பெருமையுடன் கூறிக்கொண்டு எனது வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

IV.—ANNOUNCEMENTS.

(1) PANEL OF CHAIRMEN.

Mr. SPEAKER : I nominate the following hon. Members to be the panel of Chairmen for the current session :—

1. Sri S. Lazar,
2. Srimathi A. S. Ponnammal,

[Mr. Speaker] 31st August 1959]

3. Sri T. Sampath,
4. Sri M. Jagannathan,
5. Sri A. Govindasamy,
6. Sri N. K. Palanisami.

(2) MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce that the Governor has given his recommendation for the introduction in the Assembly of the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1959, and the consideration of the Madras Civil Courts (Amendment) Bill, 1959, and the Madras Irrigation Works (Construction of Field Bothies) Bill, 1959.

(3) DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. SPEAKER : The Business Advisory Committee which met this morning has decided that the House shall sit from 8-30 a.m. to 1-30 p.m. from 1st September 1959.

(Srimathi Anandanayaki rose.)

If the hon. Member will kindly sit down and listen to me she will hear what I say. Probably, the decision of the committee may not suit some. But the Committee has decided that the House shall sit from 8-30 a.m. to 1-30 p.m.

The Committee decided also that the following items of business be taken up in the order set out below from 1st September :—

1st September	..	Items of business left over from 31st August agendas, if any.
		The Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1959.
		The Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1959.
		The Madras Agricultural Produce Markets Bill, 1959.
		The Madras Khadi and Village Industries Board Bill, 1959.
2nd September	..	The Madras Land Improvement Schemes Bill, 1959.
		The Madras Borstal Schools (Amendment) Bill, 1959.
		The Indian Partnership (Madras Amendment) Bill, 1959.
		The Madras Irrigation Works (Construction of Field Bothies) Bill, 1959.
		The Madras District Municipalities (Amendment) Bill, 1959.